தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 19, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 ஏப்ரல் 1, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு"

தமது குடியை உயர்த்துவதற்கான செயல்களைக் காலந்தாழ்த்தாமல், விரைந்து செய்ய முற்படுபவர்கள், அவற்றைச் செய்துமுடிக்கும் விதத்தினை ஆராய்வதற்கு முன்னரே, அந்தச் செயல்கள் நிறைவேறிவிடும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் – விடைகள். வினா எண் 261, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

261—

புதிய பாலம்

***31878—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 1

ஈரோடு தொகுதி, ஈரோடு நகரில் நடராஜா தியேட்டர் அருகிலுள்ள மரப்பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதை மாற்றி புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரத்தின் மையப் பகுதியாகவுள்ள நடராஜா தியேட்டர் அருகிலுள்ள மரப்பாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதன் பெயர்தான் மரப்பாலம். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கான்கிரீட் பாலம். இது மிகவும் குறுகியதாகவும், பழுதடைந்துள்ள காரணத்தாலும், போக்குவரத்துக்கு நெரிசலாக இருப்பதாலும், ஏழை எளிய குடிசைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாக உள்ளதாலும்—2500–க்கு மேற்பட்ட பாலங்களை தமிழகத்தில் கட்டிக் கொடுத்த கருணைத் தாய், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு—ஏழை எளிய மக்களின் நலன் கருதி, நடப்பு நிதியாண்டில் இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதாகக் கூறியமைக்கு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 262, திரு. இரா. வில்வநாதன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*